**13.9.2023**
**OS 82/2020**
**பி.வா.சா.1 முருகன்**
**முதல் விசாரணை தொடர்ச்சி:-**

**வாதி தரப்பில் ஆவணங்கள் குறியீடவும், இ.ம.எண்.1/2023 பேரில் மேல்முறையீடு செய்ய போவதாகவும் ஆட்சேபனை தெரித்தார். இருந்தபோதிலும், ஆவணங்கள் ஏற்கனவே எதிருரையில் தெரிவித்துள்ளபடியால் மேற்படி ஆவணங்கள் ஆட்சேபனை மற்றும் செல்லும் தன்மைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.**

20.06.2016ம் தேதி மதுரை கூடல்புதூர் காவல்நிலையத்தில் 2ம்பிரதிவாதி கொடுத்த புகார் மனு ஏற்பு சான்றிதழ் 319/2016 பி.வா.சா.ஆ.1. 19.04.2017ம் தேதி மதுரை நீதித்துறை நடுவர் நீதிமன்றம்-2ல் தாக்கல் செய்யப்பட்ட தனிப்புகார் STC.590/2017ன் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2. 10.02.2018ம் தேதி STC.590/2017ன் ஏற்பட்ட லோக்அதாலத் சமரச தீர்வு உடன்படிக்கை சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.3. 05.04.2018ம் தேதி நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம் எண்.1ல் ரூ.10ஆயிரம் செலுத்தியதற்கான குறிப்பாணை அசல் பி.வா.சா.ஆ.4. 01.10.2018ம் தேதி முத்துகிருஷ்ணனுக்கு ரூ.20ஆயிரம் செலுத்தியதற்கான பணப்பற்று ரசீது அசல் பி.வா.சா.ஆ.5. 09.03.2019ம் தேதிய முத்துகிருஷ்ணனுக்கு ரூ.20ஆயிரம் செலுத்தியதற்கான பணப்பற்று ரசீது அசல் பி.வா.சா.ஆ.6. 10.09.2019ம் தேதி நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம் எண்.1ல் ரூ.70ஆயிரம் செலுத்தியதற்கான குறிப்பாணை அசல் பி.வா.சா.ஆ.7.

**மேற்படி பி.வா.சா.ஆ.1 முதல் 7 வரையிலான ஆவணங்கள் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.**

ஒம்:-S.கணேசன்
சார்பு நீதிபதி,
மேலூர்.